கவனிக்க.-2023.11.24 ஆந் திகதிய 2360 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2361- 2023 දෙසැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2023.12.01
2361 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 294 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 295 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, திசெம்பர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

293 - B 082519- 353 (2023/12)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## மாவட்ட நீதிமன்றம்- களுத்துறை

மக்கள் வங்கி, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு -02.

*வழக்காளி*

மாவட்ட: நீதிமன்றம் களுத்துறை
வழக்கு இலக்கம்: MB 1048

மாவட்ட நீதிமன்றம்
களுத்துறை

தடை உத்தரவு (எஸ்கிசி) : 43/2023

1. கத்ரி ஆரச்சிகே தொன் ராஹூல் சிறிவர்தன,
இல. 2/பீ, செத்சிறி உயன அசல,
மத்துகம வீதி, கல்லஸ்ஸ, நாகொட, தொடங்கொட,களுத்துறை.

2. பல்லெக் கம்கானம்கே ரசிகா சுதர்சனி,
இல. 2/பீ, செத்சிறி உயன அசல,
மத்துகம வீதி, கல்லஸ்ஸ, நாகொட, தொடங்கொட,களுத்துறை.

*எதிராளிகள்*

மேற்படி இலக்கமுடைய வழக்கின் எனக்கு அளிக்கப்பட்ட எஸ்கிசி பிரகாரம் 01 ஆம் எதிராளியால் வழக்காளிக்கு செலுத்த வேண்டியுள்ள இருபத்து மூன்று இலட்சத்து அறுபத்தையாயிரம் ரூபா (ரூபா 2,365,000.00) இனை 2012, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி முதல் தீர்ப்பு வழங்கப்பட்ட தினம் வரை வருடமொன்றிற்கு வட்டி விகிதம் 18% இனை உள்ளடங்கலாக வழக்கு கட்டணம் மற்றும் 01ஆவது எதிராளியால் வழக்காளிக்கு செலுத்த வேண்டிய 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதி களுத்துறை மாவட்ட நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு 01 ஆம் எதிராளி தவறியுள்ளார். இதன் அடிப்படையில் 2023.08.02 ஆந் திகதி என்னால் தடை செய்யப்பட்ட 01 ஆம் எதிராளிக்குரிய கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் உள்ள ஆதனம் களுத்துறை, தொடங்கொட, நாகொட, கல்லஸ்ஸ சந்தி, மத்துகம வீதி, செத்சிறி உயன அண்மையில், இல. 2/பீ எனும் முகவரியில் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏல விற்பனை செய்வதற்கு இத்தால் ஆவணம் செய்கின்றேன்.

### அட்டவணை

களுத்துறை காணி பதிவு அலுவலகம், டீ.ஜீ. 231/ 272 எனும் இலக்கத்தை உடைய பத்திருவில் பதிவு செய்யப்பட்ட மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுனை, நாகொட கிராமத்தில் அமைந்துள் "வெனிவெல் கெடிய" எனும் பெயருடைய காணிக்கு அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர் என்.எஸ். எல். பெர்ணாந்து என்பவரால் 1977.11.20 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1735 எனும் இலக்கமுடைய வரைபடத்தின் 8 ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகள்-

வடக்கு: பிரதான வீதி;
கிழக்கு: லொட் இல. 9;
தெற்கு: லொட் இல. 28;
மேற்கு: லொட் இல. 27.

எனும் எல்லைக்குள் அமையப்பெற்றுள்ள இருபத்தொன்று தசம் இரண்டு பூச்சியம் பேர்ச் (00ஏ.00றூ.21.20பே.) முழுப்பரப்பு காணி மற்றும் அதற்கு அமையப்பெற்றுள்ள மரம், செடி, கொடி, பழங்கள், கட்டிடங்கள் அனைத்தும் உள்ளடங்கலாகும்.

பதிவாளர்/பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம், களுத்துறை.

2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19.

12- 48

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

( அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் கொழும்பில் நடைபெறுகின்றது)

நுவரெலியா, ஹாவா எலிய, உடபுஸ்ஸல்லாவ வீதி, இல. 84 என்னும் இடத்தில் அமைந்துள்ள இன்டர்பெஷன் (பிறைவட்) லிமிடட் தொடர்பாக,

வழக்கு இலக்கம்: CHC 69/ 2023/CO
தன்மை : கலைப்பு செய்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 270(இ) மற்றும் (ஈ) ஆம் பிரிவின் கீழ், இன்டர்பெஷன் (பிறைவட்) லிமிடட் பெயர் கொண்ட நிறுவனத்தை கௌரவ நீதிமன்றத்தினால் கலைப்பு செய்வதற்கான கட்டளையை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பம் விடயம் தொடர்பானது .

காமெக்ஸ் இன்டர்நெஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடட் ,
ப்ளெட்/ஆர் எம் 1702 17/F சினோ சென்டர், 582- 592, நேத்தன் ரோட், மொங்கொக் கே எல், ஹொங்கொங்.

*மனுதாரர்*

மேல் மாகாணத்தின் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினை கலைப்பு செய்வதற்கான மனுவொன்று 2023, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி குறித்த நீதிமன்றத்திற்கு மனுதாரர் சார்பாக சட்டத்தரணி கே. உபேந்த்ர குணசேகர என்பவரினால் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த மனு 2023, திசெம்பர் மாதம் 14ஆந் திகதி நீதிமன்றம் முன்னிலையில் விசாரணைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமையால், குறித்த மனுவின் அடிப்படையில் கட்டளையை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அல்லது அதற்கு எதிராக செயல்படுவதற்கு அல்லது ஆதரவளிப்பதற்கு குறித்த நிறுவனத்தின் எந்தவொரு கடன் தருநர் அல்லது உதவுத் தொகை செலுத்துநர் இருப்பார்களாயின் அது குறித்த நபருக்கு தற்போதைய செயற்பாடுகளுக்காக அவற்றை விசாரணை செய்வதற்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம்: திரு. உபேந்திர குணசேகர,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 135- 1/3, குணசிங்கபுர அலுவலக கட்டிடம்,
புனித செபஸ்தியன் வீதி, கொழும்பு -12.

**குறிப்பு**: அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட திரு. கே. உபேந்த்ர குணசேகர, சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன், நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2023, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும், அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி.

12-65

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2023***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| ***திசெம்பர்*** | .. | வெள்ளி | *01.12.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *17.11.2023* |
| | | வெள்ளி | *08.12.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *24.11.2022* |
| | | வெள்ளி | *15.12.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *01.12.2023* |
| | | வெள்ளி | *22.12.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *08.12.2023* |
| | | வெள்ளி | *29.12.2023* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *15.12.2023* |

***அட்டவணை - 2024***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ***சனவரி*** | .. | வெள்ளி | *05.01.2024* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *22.12.2023* |
| | | வெள்ளி | *12.01.2024* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *29.12.2023* |
| | | வெள்ளி | *19.01.2024* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *05.01.2024* |
| | | வெள்ளி | *26.01.2024* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *12.01.2024* |
| ***பெப்புருவரி*** | .. | வெள்ளி | *02.02.2024* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *19.01.2024* |
| | | வெள்ளி | *09.02.2024* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *26.01.2024* |
| | | வெள்ளி | *16.02.2024* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *02.02.2024* |
| | | வியாழன் | *22.02.2024* | .. | நண்பகல் 12 | வெள்ளி | *09.02.2024* |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*